# கண்ணீர் அஞ்சலி

## எங்கள் முத்து மறைந்தது



மண்ணில்
03.12.1942

விண்ணில்
20.05.2019

## அமரர் திரு அருணாசலம் முத்துலிங்கம்

கடலில் முத்துக் குளிக்கச் செல்வோர் சிலர், அவர்களுள் சிலருக்குத்தான் அரிதாக சிப்பியினுள் முத்து கிடைத்துள்ளது. உலகில் மானிடர்கள் பலர் பிறந்தாலும், அவர்களுள் சிலர்தான் முத்துக்களாக, மகான்களாக பரிணமிக்கின்றார்கள். அவ்வாறு எங்கள் காரைமண்ணின் தவப்பயனாக உதித்து உதயனில் பத்திரிகையாளராகவும், ஓர் பன்முகப்புலமை கொண்டவராகவும் திகழ்ந்தவர் எங்கள் அன்புக்கும் நேயத்திற்கும் உரியவரான அமரர் திரு முத்துலிங்கம்ஜயா அவர்கள். அவர் “கஜனி” என்ற பெயரில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார். சிறந்த மொழிபெயர்ப்பாளர், ஊடகவியளாளர் என்பது போன்ற அவரது பன்முகத்தோற்றம் அவருடன் பழகியவர்களுக்கு நன்கு தெரியும். மரணத்தின் விளிம்புவரை படித்துக் கொண்டிருந்தார்கள் சாக்கிரட்டீஸ், உமர்முத்தா, பகவத்சிங் அவர்களைப்போல் வாழ்நாள் முழுவதும் பல பயனுள்ள அரியநூல்களை படித்துக் கொண்டிருந்தவர் எங்கள் முத்துலிங்கம்ஜயா. அவர் தான் படித்த பல புத்தகங்களை பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கம் மூலமாக காரைநகர் மாணவர் நூலகத்துக்கு அன்பளிப்பு செய்து அடுத்த தலைமுறையினரையும் அறிவொளி ஊட்டிய பெருமை அன்னாருக்கு உண்டு. இவ்வாறு பல சிறப்பியல்களைக் கொண்ட அமரர் முத்துலிங்கம்ஜயா நம்மை விட்டுப்பிரிந்த செய்தி கேட்டு சுவிஸ் மண்ணில் வாழும் எங்கள் காரைமக்களும் அவருடன் பழகிய ஏனையோரும் கண்கலங்கி மிகுந்த துயர்அடைகின்றோம்.

உயிர் கொண்டதமிழே நீவீர் நிரந்தரமாக உறங்கிவிட்டது ஏன்தானோ? கலங்குது ஐயா எங்கள் கண்ணில் வெள்ளம். இனி எந்தநாளில் உங்களை நாங்கள் காண்போம்? நீவீர் மறையவில்லை தமிழ் உள்ளவரை உங்கள் நாமம் எங்கள் நாவில் உச்சரிக்கப்படும்.

“தக்கார் தகவிலார் அவர் தம்
எச்சத்தால் காணப்படும்”

என்ற குறளுக்கேற்ப நீங்கள் விட்டுச்சென்ற பணிகள் எங்கள் மனதில் நீங்காத நினைவலைகளாக என்றும் தொடரும்.

அன்னாரைப் பிரிந்து வாழும் அவரது குடும்பத்தாருக்கும் உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகா சமேத சுந்தரேசுவரப்பெருமானை திருத்தாள் பணிகின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**இங்ஙனம்**
**சுவிஸ் காரைஅபிவிருத்திச் சபை**
**செயற்குழு உறுப்பினர்கள்,**
**மொழி, கல்வி, கலை மேம்பாட்டுக் குழு**
**சுவிஸ்வாழ் காரை மக்கள்.**
**22.05.2019**